## பொதுமக்கள் வெகுவாகப் பாராட்டு!

# விக்டோரியா பொது அரங்கம் பழமை மாறாமல் திறப்பு!

## புதிய தலைமுறை தொலைக்காட்சி பாராட்டு!


சென்னை,டிச.28-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் புனரமைக்கப்பட்ட "விக்டோரியா பொது அரங்கம்" திறந்து வைக்கப்பட்டது குறித்து புதிய தலைமுறை தொலைக்காட்சி வெளியிட்ட சிறப்பு ஒளிப்பரப்பு நிகழ்ச்சி வருமாறு:

சென்னையில் வரலாற்று சிறப்பு மிக்க விக்டோரியா பொது அரங்கம் புதுப்பிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது. 32 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன். பாரம்பரிய கட்டடக்கலை மாறாமல் புனரமைக்கப்பட்டுள்ளது. விக்டோரியா பொது அரங்கின் சிறப்பம்சங்கள் குறித்து புதிய தலைமுறை செய்தியாளர் ரமேஷ் கூறியதாவது:

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கும் ரிப்பன் மாளிகைக்கும் இடையே இந்த விக்டோரியா பொது அரங்கம் திறக்கப்பட்டிருக்கிறது. 1880 இல் கட்டப்பட்ட இந்தக் கட்டிடம் பல காலங்களில் பல்வேறு விதமாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது.





1967 இல் மிகவும் பாதிப்படைந்த இந்தக் கட்டிடத்தை புதுப்பிப்பதற்காக அப்போதைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா இதற்கான அடிக்கல்லை நாட்டினார். ஆனால் 60 ஆண்டுகளாக அந்தப் பணி நடைபெறவில்லை. அதற்குப் பிறகு 2009 ஆம் ஆண்டும் புதுப்பிப்பதற்காக பணம் ஒதுக்கினார்கள்.

2020 உள்ளிட்ட பல்வேறு கால கட்டங்களில் இதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு இருந்தாலும், தற்போது தான் 2023 இல் அடிக்கல் நாட்டப்பட்டு இதற்கான செயல்பாடு கிட்டத்தட்ட 33 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு தயாராகி இருக்கிறது. இந்த அரங்கில் என்ன மாதிரியான விஷயங்கள் இருக்கிறது என்றால் அருங்காட்சியகம் போன்ற விஷயங்களை உள்ளே சென்று நாம் பார்க்கலாம்.

விக்டோரியா பொது அரங்கத்தில் 3 தளங்கள் இருக்கின்றன. தரைத் தளத்தில் யார் யார் எல்லாம் உரை நிகழ்த்தினார்கள் என்கின்ற வரலாறும் எப்போதெல்லாம் பேசினார்கள் என்பது சொல்லப் பட்டிருக்கிறது. விவேகானந்தர், காந்தி, அண்ணா அதேபோல பல்வேறு தலைவர்களுடைய உரைகள் இங்கே நிகழ்த்துப்பட்டு இருக்கின்றன.

அது மட்டுமல்லாமல் இங்கே மேடை நாடகங்கள். குறிப்பாக சபாபதி என்ற நாடகம் எப்போது திரையிடப்பட்டது என்பது குறித்தும் ரத்னாவளி என்கிற நாடகமும் , தூக்குத்தூக்கி போன்ற நாடகங்களும் எந்தெந்த தேதிகளில் நிகழ்த்தப்பட்டன என்பது குறித்தும் பிற நிகழ்ச்சிகள், நாடகத்தை தாண்டிலும் புத்தக வெளியீட்டு விழா போன்ற நிகழ்வுகளும் இங்கே நடைபெற்றிருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல் நில நடுக்கம் போன்று எதுவும் வந்தால் அதிலிருந்தும் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக பல்வேறு புதிய கட்டுமானத் தொழில் நுட்பத்தையும் பயன்படுத்தி இது வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தஅரங்கத்தினுடைய ஒரு பகுதியில் பழங்கால இசைக்கருவிகள் வைக்கப்பட்டிருக்கிறன்றன. அந்தக் காலத்தில் உபயோகப் படுத்தப்பட்ட பல்வேறு வகையான இசைக் கருவிகள் அதிக அளவில் வைக்கப்பட்டிருக்கின்றன. அதை இரண்டுபக்கமும் பார்க்கலாம். அது மட்டுமல்லாமல் பல்வேறு இசைக் கருவிகள் இதற்கு முன்பு எங்கும் பார்க்காத அளவிற்கு அரிய வகை இசைக் கொடுக்கக் கூடிய கருவிகள் இங்கே காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறன.

இந்த அரங்கத்தின் மையப்பகுதியில் 300 பேர் அமர்ந்து நாடகங்களையும் தலைவர்களின் உரைகளையும் கேட்பதற்கான வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக இந்த அரங்கில் விவேகானந்தர், மகாத்மா காந்தி, அயோத்தி தாசப் பாண்டிதர், எம்.சி. இராசா, இரட்டைமலை



சீனிவாசன் உள்ளிட்ட தலைவர்களும் இங்கே வந்து உரையாற்றி இருக்கிறார்கள். அந்தக் காலத்தில் பொழுது போக்கிற்கு என்று எந்தவித ஒரு அரங்கமும் இல்லாத காலத்தில், முதன் முதலாக இந்த விக்டோரியா அரங்கம் தான் பொது அரங்கமாக சென்னையினுடைய மையப் பகுதியில் அமைந்திருந்தது. அதே பழைமை மாறாமல் அதே இருக்கைகளோடு இங்கே அமைக்கப்பட்டு இருக்கிறது. இங்கே ஆன் லைனில் முன் பதிவு செய்து விட்டு வந்து இந்த அரங்கை பார்வையிடலாம்.

இவ்வாறு புதிய தலைமுறை தொலைக்காட்சி சிறப்பு செய்தி வெளியிட்டிருக்கிறது.

## முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி

# சிறப்பு முகாமில் வாக்காளர் சேர்த்தல் - நீக்கல் - திருத்தல் பணிகள் ஆய்வு!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்,பாரதி மேற்கொண்டார்!



சென்னை, டிச.28-

சிறப்பு வாக்காளர் திருத்தம் (எஸ்.ஐ.ஆர்.) பணிகளின் இறுதியாக வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, "வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாதவர்கள் ஆட்சேபனை மற்றும் உரிமை கோரல் வரும் ஜன.,18 வரை தெரிவிக்கலாம் என்றும்; அனைத்து ஓட்டுச் சாவடி மையங்களிலும் புதிய வாக்காளர்கள் பெயர் சேர்த்தல், திருத்தம், முகவரி மாற்றம் மற்றும் புகைப்படம் மாற்றம் ஆகியவற்றிற்காக 2025 டிசம்பர் 27, 28 மற்றும் 2026 ஜன., 3, 4 ஆகிய நாட்களில் சிறப்பு முகாம்கள் நடைபெறும்" என தேர்தல் ஆணையம் அறிவித்திருந்ததைத் தொடர்ந்து,

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள், நேற்று (27.12.2025) காலை, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நங்கநல்லூர், ராம் நகர், வாக்குச் சாவடி எண்.303ல் நடைபெற்று வரும் சிறப்பு முகாமில் வாக்காளர் சேர்த்தல் - நீக்கல் - திருத்தம் ஆகிய பணிகள் சரியாக நடைபெறுகிறதா என்பதனை ஆய்வு செய்து, வாக்குச் சாவடி முகவர் மற்றும் வாக்குச் சாவடி உறுப்பினர்கள் ஆகியோருக்கு உரிய ஆலோசனைகளை வழங்கினார். அதுபோது, 162வது வட்டக் கழகச் செயலாளர் சரவணன் மற்றும் 162வது வார்டு மாமன்ற உறுப்பினர் சாலமன் ஆகியோர் உடனிருந்தனர்.

# உடுமலையில் 'அறிவுத்திருவிழா' விளக்கக் கருத்தரங்கம்!



கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி, திருப்பூர் தெற்கு மாவட்டம் உடுமலைப்பேட்டையில் உள்ள போடிபட்டி, விவாஸ் மஹாலில் 26.12.2025 அன்று, பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி தலைமையில் அறிவுத் திருவிழா விளக்கக் கருத்தரங்கம் எழுச்சியோடு நடைபெற்றது.

உடுமலை மத்திய ஒன்றிய கழகச் செயலாளர் க.செந்தில்குமார் முன்னிலை வகிக்க, திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார் வரவேற்புரை ஆற்றினார். 'தமிழ்நாடு காவிச்சாயம் பூசாமல் இருக்கக் காரணம் திராவிடமும், சமூக நீதியும்' என்ற தலைப்பில் கழக மாணவர் அணிச் செயலாளர் ராஜீவ் காந்தியும், 'நவீன தமிழ்நாடும்; கருப்பும் - சிவப்பும்' என்ற தலைப்பில் கழக செய்தித்தொடர்பு துணைச்செயலாளர் சூரியா கிருஷ்ணமூர்த்தியும் உரையாற்றினார். 400-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று கருத்துக்களை உள்வாங்கியதுடன், சந்தேகங்களை கேட்டும் விளக்கம் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழக துணைப் பொதுச் செயலாளர் - அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் - மண்டல பொறுப்பாளர் - அமைச்சர் அர.சக்கரபாணி, கழக மகளிர் அணி துணைச் செயலாளர் - அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை வழங்கினர். இறுதியாக மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சா. கவியரசு நன்றி கூறினார்.

மாவட்ட அவைத்தலைவர் ஜெயராம கிருஷ்ணன், மாநில பொறியாளர் அணி துணைச்செயலாளர் சண்முகசுந்தரம், திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக இளைஞர் அணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.





